துறையைப் பொறுத்தமட்டிலே ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டு 100 எக்டேர் பரப்புக்குப் போட வேண்டும் என்று அவர்களை விதை உற்பத்தியாளர்கள் என்ற பட்டியலிலே தேர்வு செய்து, அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 394, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

394–

சேலம் உருக்காலைத் திட்ட நிலத்திலிருந்து விளையாட்டு அரங்கம் கட்டுதல்.

19783–திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–

சேலம் உருக்காலைக்கென கையகப்படுத்தப்பட்டுள்ள நிலத்தில், எஞ்சியுள்ள நிலத்தில் ஒரு விளையாட்டு அரங்கம் கட்ட, மத்திய அரசிடமிருந்து நிலத்தைப் பெற மாநில அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் உருக்காலைத் திட்டத்திற்குக் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் மொத்தம் 3962.70 ஏக்கர்கள். இவை அனைத்தும், சேலம் உருக்காலைக்கான முதற்கட்டப் பணிக்கும், மற்ற விரிவாக்கப் பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில், சேலம் உருக்காலை நிறுவனம், நகராட்சிக்குட்பட்ட எல்லையிலுள்ள 150 ஏக்கர் நிலத்தினை தமிழ்நாடு அரசுக்கு, மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்த, குத்தகை அடிப்படையில், மத்திய அரசின் அனுமதியுடன் ஒதுக்கியுள்ளது. இவை தவிர, வேறு நிலம் எதுவும் விளையாட்டு அரங்கம் கட்ட, சேலம் உருக்காலை நிறுவனத்திடமிருந்து பெறுவது சாத்தியமில்லை.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட கிட்டத்தட்ட 4 ஆயிரம் ஏக்கர் நிலத்தை 'இன்டக்ரல் ஸ்டீல் பிளான்ட்' உருவாக்குவதற்காக கையகப்படுத்தப்பட்டது. தற்போது, அது ஒரு இரும்பு தொழிற்சாலையாக வராமல், ஒரு உருட்டாலையாக இருக்கிற அந்தச் சூழ்நிலையில், 4 ஆயிரம் ஏக்கர் நிலம், உருட்டாலைக்குத் தேவையில்லை என்கிற காரணத்தினால், அந்த நிலமெல்லாம் வீணாகப் போய்க்கொண்டிருப்பதை உணர்ந்து, 150 ஏக்கர் நிலம் மோகன்

1994 ஏப்ரல் 26]

குமாரமங்கலம் அரசு மருத்துவமனைக்கு ஒதுக்கியிருப்பதை, குத்தகைக்கு எடுத்திருப்பதைப்போல, 100 ஏக்கர் நிலத்தை– மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் விளையாட்டுத் துறைக்கு அளிக்கிற ஊக்கத்தைப் பயன்படுத்துவதற்காக, அங்கே 100 ஏக்கர் நிலத்தை குத்தகைக்குப் பெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலைத் திட்டத்திற்கு 1970–72 ஆம் ஆண்டு வரை மாநில அரசால் நில எடுப்பு செய்யப்பட்டது. நில எடுப்பு செய்யப்பட்ட மொத்தம் 3962.70 ஏக்கர் நிலத்தில் 3347.18 ஏக்கர் பட்டா நிலம். 615.52 ஏக்கர் புறம்போக்கு நிலம். மொத்த நிலத்தில் 2770 ஏக்கர் நிலம், சேலம் உருக்காலைக்கான முதற்கட்டப் பணிக்கும் மற்றும் இருகட்ட விரிவாக்கப் பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேற்கொண்டு, விரிவாக்கப் பணிக்கு மத்திய அரசு அனுமதி வழங்கும்போது, எஞ்சியுள்ள நிலங்கள் பயன்படுத்தப்பட இருக்கிற காரணத்தினால், இதுகுறித்து சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கிட்டத்தட்ட 4 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் அமைந்திருக்கிற இந்த உருட்டாலையும், இனி அடுத்தக்கட்டமாக எதிர்நோக்கியிருக்கிற ஆலையினுடைய விஸ்தரிப்புக்கும் சேர்த்து, எவ்வளவு நிலம் தேவைப்படுகிறது; மீதியாக இருக்கிற நிலம் எவ்வளவு; அந்த நிலத்தை குத்தகைக்கு, விளையாட்டுத் துறைக்குக் கொடுப்பதற்கான வழிவகைகளை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் இருக்கிற 3962 ஏக்கர் நிலத்தில், 2770 ஏக்கர், உருக்காலைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. 150 ஏக்கர் நிலம், சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரிக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதி இருக்கிற நிலம், அதனுடைய விரிவாக்கப் பணிக்காக அங்கே வைக்கப்பட்டிருக்கிறது. விளையாட்டுத் துறைக்கு வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரும்பத் திரும்பக் கேட்கிற காரணத்தினால், அவர்கள் ஒரு கோரிக்கை மனுவினை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கோ, எனக்கோ, எழுதி அனுப்பினால், அதுகுறித்து மத்திய அரசோடு பேசி, ஆவன செய்ய முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *395*, திரு. ஆர்.பி. பரமசிவம் மற்றும் டாக்டர் வெ. புருஷோத்தமன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

***395*---**

ஒகேனக்கல் முதலைப் பண்ணையின் கழிவுநீர் ஆற்று நீரில் கலப்பதைத் தடுத்தல்.

***24893*-திரு. ஆர். பி. பரமசிவம்: டாக்டர் வெ. புருஷோத்தமன்:**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்: கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஒகேனக்கல்லில் உள்ள "முதலைப் பண்ணையின்" கழிவு நீர் ஆற்று நீரில் கலப்பதால் சுற்றுச் சூழ்நிலை பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அக்கழிவு நீர் ஆற்றில் கலக்காமல் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஒகேனக்கல்லில் அமைந்துள்ள முதலைப் பண்ணையிலிருந்து காவிரி ஆற்றில் வெளியேற்றப்படும் கழிவுநீர் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் நிர்ணயித்துள்ள தர அளவுகளுக்குட்பட்டு இருப்பதால் சுற்றுச் சூழல் பாதிக்க வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் ஒரு சுற்றுலா மையமாக இருந்து வருகிறது. அங்கே பலதரப்பட்ட மக்கள் சென்று, அந்தச் சூழ்நிலையை அனுபவித்து வருகிறார்கள். அந்த நிலையில், அங்கே இருக்கிற முதலைப் பண்ணையிலிருந்து வெளியேற்றப்படுகிற கழிவுநீர், காவிரி ஆற்றில் கலப்பதால், அங்கு மீன்கள் இறக்க நேரிடுகிறது என்று மீன் பிடிப்பவர்கள் சொல்கிறார்கள். அதேநேரத்தில், அங்கு குளிப்பவர்களும் ஒருவிதமான நாற்றம் ஏற்படுகிறது என்று சொல்லுகிறார்கள். குடிநீருக்குப் பயனற்ற வகையில் ஒருவித துர்நாற்றம் இருப்பதாக, அங்கே அதைப் பயன்படுத்துகிற பொதுமக்களும் கூறுகிறார்கள். ஆகவே, இந்தச் சூழ்நிலையில், அந்த முதலைப் பண்ணையிலிருந்து வெளியேற்றப்படுகிற கழிவுநீரை சுத்தப்படுத்தி, ஆற்றில் கலக்க வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.